[1967 மார்ச் 29

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: ஏறத்தாழ அரை மணி நேரம் இந்தக் கேள்விக்கு ஆகியிருக்கிறது. அடுத்த கேள்வி, எண். 3 உள்ளது.

2. உரிமைப் பிரச்சினை.

பேரவைத் தலைவர்மீது மன்றோரம் என்ற குற்றச்சாட்டு.

திரு. எ. சிதம்பரநாத நாடார்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் ஒரு கேள்வி கேட்பதற்கு அரை மணி நேரமாகக் கையை உயர்த்திக் கொண்டிருந்தேன். ஆனால், தலைவர் அவர்கள் ஆளும் கட்சி அங்கத்தினர்களுக்குத்தான் கேள்விகள் கேட்பதற்கு சௌகரியம் அளிக்கிறார்களே தவிர, எதிர்க்கட்சியில் இருக்கும் என்னைப் போன்ற நபர்களுக்குக் கேள்விகள் கேட்பதற்கு கையை உயர்த்தினாலும் நீங்கள் கேள்வி கேட்க அனுமதி தரவில்லை என்று வருத்தப்படுகிறேன். இந்த நிலையில் இன்னும் அப்படி இருந்து வரக்கூடாது என்று தாழ்மையோடு கேட்டுக்கொண்டு நீங்கள் ஆளும் கட்சிக்குத்தான் ஆதரவு அளிப்பீர்களா அல்லது எங்களுக்கும் உண்டா என்று தீர்ப்பு கூறும்படி மிகத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தப் பேரவை நடுவராக இருப்பவரின் தராசுக்கோல் ஒரு பக்கமாகச் சாய்வதாக இப்போது குற்றஞ்சாட்டியுள்ளார். இவ்வாறு டெபுடி ஸ்பீக்கர் அவர்கள் மீதும் ஒருமுறை குற்றஞ் சாட்டியிருக்கிறார். இது இரண்டாவது தடவை. இப்படிப்பட்ட குற்றச்சாட்டு அவையின் கண்ணியத்தைப் பாதிக்கக் கூடியதாக இருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ப்ரீச் ஆஃப் ப்ரிவிலேஜ், சபையின் கண்ணியத்தைக் குறைத்திருக்கிறார்கள் என்று 'ப்ரைமா ஃபேஸி' மேலெழுந்தவாரியாக எனக்குத் தெரிகிற காரணத்தினால் இந்த உரிமைப் பிரச்னையை ப்ரிவிலேஜஸ் கமிட்டிக்கு, உரிமைக் குழுவிற்கு, 192-வது விதிப்படி நானாகவே, சட்டப் பேரவையின் தீர்மானம் இல்லாமல், என் உரிமையை நான் இதில் பயன்படுத்தி, உறுப்பினர் சபாநாயகர் மீது சாட்டிய மன்றோரம் என்ற குற்றச்சாட்டை நான் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன் என்று அறிவிக்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் எழுப்பிய பிரச்னையில் தயவு செய்து சபாநாயகர் அவர்கள் மீது பாரபட்ச நிலை என்று நினைத்தோ சொல்லவோ இல்லை என்று சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: அருள்கூர்ந்து, ஒன்றைக் கவனிக்க வேண்டும். நான் தீர்ப்புக் கூறிவிடவில்லை. உரிமைக் குழுவானது மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்றுதான் அனுப்பி வைத்திருக்கிறேன். அவையின் தீர்மானம் இல்லாமலேயே, எனக்கு இருக்கிற அதிகாரத்தின்படி நான் நேரடியாக உரிமைக் குழுவிற்கு அனுப்பலாம், என்ற அந்த விதியின்படி அனுப்பிவைக்கிறேன்.

1967 மார்ச் 29]

Sri K. VINAYAKAM A *prima facie* case has got to be established.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து, 192-வது விதியைப் படித்துப் பாருங்கள். 'ஸுவோ மோடோ' என்ற முறையில் சபையின் தீர்மானத்திற்கு விடாது, நேரடியாக அனுப்பி வைக்கலாம். சபாநாயகர் ஒருதலைப்பட்சமாக நடக்கிறார் என்று அவையில் குற்றம் சாட்டுவதாக இருந்தால் அதை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கவேண்டுமென்ற கடமை இருப்பதால், இதை அனுப்பி வைக்கிறேன்.

1. வினாக்கள், விடைகள்.

Important Government Files.

* S.N.C. 3.—Dr. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any important files were removed from the Fort St. George, between the 15th February 1967 and the date from which the new D.M.K. Ministry was formed ;

(*b*) if so, the details thereof.

(*c*) whether any other important files were removed to the Central Home Ministry during this period; and

(*d*) if so, the details thereof ?

The Hon. Thiru C. N. ANNADURAI : (*a*) & (*b*) Certain secret records relating to anti-Hindi agitation were destroyed under the orders of the previous Government;

(*c*) & (*d*) No files were removed to the Central Home Ministry.

Dr H. V. HANDE : Sir, will the Hon. Chief Minister be pleased to state, when exactly those files were destroyed?

The Hon. Thiru C. N. ANNADURAI : It is fairly a long list. The previous Chief Minister had given an order for destroying certain files connected with the anti-Hindi agitation. Here is the long list about them :—

(1) File contains police reports and detention orders.

(2) File contains writ petitions, etc., filed by the student, Mr. R. Sethu of the Madurai Medical College before the High Court of Madras.

(3) File contains detention order relating to the detention of Mr. M. Karunanidhi, papers relating to the writ petition, release order and orders regarding sanction of fees to the Advocate-General and Public Prosecutor.

(4) Another file connected with Mr. M. Karunanidhi, containing the letter of the Inspector-General of Police regarding the visit of the Collector's wife to Borstal School to see Mr. Karunanidhi and reports regarding his health condition.